12.03.2026



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.152/2017**

**பி.வா.சா. 1–மனோகரன், த/பெ.சிவசங்கரன்**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி முருகேசன் எனக்கு தாய்மாமா ஆவார். தாவா சொத்து வாதி முருகேசனுக்கு பாத்தியப்பட்டதாக தான் பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.வாதி 10.12.1984 ம் தேதி தாவா சொத்துக்களுடன் கூடிய கிரையம் வாங்கி கிரைய ஆவணங்களை இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என கோருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 250/6P என்பது தாவா சொத்தின் சர்வே எண்ணாகும். தாவா சொத்து சர்வே எண்.250/6P வடபுறத்தில் நான் கிரையம் பெற்ற சொத்து உள்ளது என்று சொன்னால் சரிதான். 18.02.2008 ஆண்டு தான் தாவா சொத்திற்கு வடபுறம் உள்ள சொத்தை நான் கிரையம் வாங்கினேன். நான் கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தல் தாவா சொத்தைப் பற்றி குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால்

12.03.2026



சரிதான். என்னுடைய கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்திற்கு தென்புறத்தில் பாஸ்கர் என்பவருக்கு 5 ½ செண்ட் நிலம் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான் அது கூட்டு சொத்து ஆகும். இவ்வாறு இந்த 5 ½ செண்ட் நிலம் பாஸ்கருக்கம் வாதி முருகேசனுக்கும் தான் கூட்டு என்றால் சரிதான். இந்த கூட்டு சொத்தைப் பொருத்தளவில் வாதியின் பெயரில் உள்ள கூட்டு உரிமையை பொருத்து பாஸ்கரன் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரிதான்.அந்த கூட்டு சொத்தில் வாதிக்கு 5 ½ வடபுறத்திலும் பாஸ்கருக்கு 5 ½ தென்புறத்தில் பாத்தியப்ப்படடது என்று சொன்னால் சரியல்ல. பாஸ்கருக்கும் வாதிக்கும் தாவா சொத்துக்களுடன் கூடிய கூட்டு உரிமை சொத்தில் சம பங்கு உண்டு என எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல முருகேசன் பெயரில் பட்டா இல்லை வழக்கிற்காக பெற்றுவிட்டார்கள். முருகேசன் பெயரில் கூட்டு பட்டா ஏற்பட்டத்தைப்பொருத்து பாஸ்கரன் எந்த விதமான ஆட்சேபனையும் செய்யில்லை என்று சொன்னால் பாஸ்கரனுக்கு இந்த கூட்டு பட்டா பற்றி தெரியுமா என்றால் தெரியவில்லை. கூட்டு பட்டாவை ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வில்லை என்று சொன்னால் சரியல்ல நான் தாசில்தார் மூலம்நடவடிக்கை எடுத்தேன்

12.03.2026



அவ்வாறு நான் நடவடிக்கை எடுத்தற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எந்த விதமான சம்பந்தமும் இல்லை அதனால் தாசில்தார் எனக்கு அறிவிப்பு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி வழக்கு சொத்துக்களுடன் கூடிய சொத்துக்களை துரைசாமி என்பவரிடம் கிரையம் பெற்றார் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ 1 கிரைய ஆவணம் தான் அந்த வாதி பெற்ற கிரைய ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 வாதியினுடைய கிரைய ஆவணத்தில் சொத்து விவரத்தில்  அயிட்ட எண்.6 தாவா சர்வே எண்.250/6P 0.11 ல்  0.5  ½ செண்ட் நிலம் காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், ஆனால் பட்டா துரைசாமி பெயரில் இல்லை. இவ்வாறு வாதி கிரையம் பெற்ற 5 ½ செண்ட் நிலத்தின் தென்புறத்தில் தான் பாஸ்கருக்கு பாத்தியப்பட்ட 5 ½ செண்ட் நிலம் உள்ளது என்று சொன்னால் சரிதான். துரைசாமியின் அண்ணன் பெயர் குமாரசாமி என்று சொனனால் சரிதான். இந்த குமாராசாமியின் மகன் வாதி முருகேசன் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தின் மூலம் வாதி மற்றும் குமாரசாமியின் இதர வாரிசுகள் சேர்ந்து தான் தாவா சொத்துக்களுடன் சேர்த்து எனக்கு விற்பனை செய்து சுவாதீனம் கொடுத்துவிட்டார்கள். பி.வா.சா.ஆ.3

12.03.2026



என்னுடைய கிரைய ஆவணத்தில் தாவா சொத்தைப் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான் ஆனால் எனக்கு கிரையம் கொடுத்த வாதி முருகேசன் வகையறா பட்டா இல்லை தாவா சொத்துக்களையும் வைத்துக்கொள்ளும் படி வாய்மொழியாக கூறினார். முருகேசன் அவ்வாறு வாய்மொழியாக தாவா சொத்தைப் பற்றி கூறியதற்கு வெண்ணிலை ஆவணம் எதுவும் எழுதப்பட்டதா என்றால் முருகேசன் வெண்ணிலை பாக பத்திரம் என்னிடம் கொடுத்துள்ளார். பி.வா.சா.ஆ.2 வெண்ணிலை பாக பத்திரத்தில் 5 பாகஸ்தருக்கும் ஒதுக்கப்டபட சொத்து விவரத்தில் தாவா சொத்து பற்றி குறிப்பிடபடவில்லை என்று சொன்னால் சரிதான். வாதி வா.சா.ஆ.1 ஆவணப்படி தாவா சொத்துக்களை தவிர மற்ற சொத்துக்களை கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 உப்பிலியபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்று சொனன்ால் சரிதான். சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிய பட்ட ஆவணம் பொது ஆவணம் என்று சொன்னால் சரிதான். பதிவு செய்யப்பட்ட ஆவணத்தைப் பற்றி கூட்டு பங்குதரார்களுக்கு தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பட்டா அவ்வாறு மாற்றப்பட்ட விவரம் 15.04.2017 ஆண்டு இணையதள மூலமாக நான் தெரிந்துகொண்டேன். பி.வா.சா.ஆ.2 வெண்ணிலை கூட்டு பாகஸ்தரர்களோ

12.03.2026



அவரது வாரிசுகளோ வாதி 1984 ம் ஆண்டு தாவா சொத்தக்களுடன் மற்ற சொத்துக்களை கிரையம் பெற்று ஆட்சேபனை செய்யவில்லை என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. 1984 ஆண்டு வாதி தாவா சொத்துக்களுடன் கூடிய மற்ற சொத்துக்களை கிரையம் வாங்கிய சங்கதி எனக்கும் மற்ற கூட்டு பாகஸ்தருக்கும் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த குமாரசாமியின் வாரிசுகளை வைத்து தாவா சொத்துக்களுக்கு பட்டா பெற்றேனா என்றால் பட்டா பெறுவதற்கு முயற்சி செய்யவில்லை. வாதி முருகேசனும் குமாரசாமியின் வாரிசுகளில் ஒருத்தர் என்றால் சரிதான். 1984 ஆண்டு குமாரசாமி கிரையம் வாங்கிய சொத்தை அவருடைய உடன் பிறந்தவர்களுக்க நன்கு தெரியும் ஆகையால் குமாரசாமி எனக்கு வாய்மொழியாக எனக்கு கிரையம் கொடுத்தார் என சொல்வது சரியல்ல. தாவா சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்து தொழிற்சாலை கட்டியுள்ளேன் என்று சொன்னால் தொழிற்சாலை கட்டியுள்ளேன் ஆனால ஆக்கிரமிப்பு செய்யவில்லை. நான் தாவா சொத்தில் தொழிற்சாலை கட்டி ஆக்கிரமப்பு செய்யதபோது வாதி அரசாங்க அளவீடு செய்ய நான் வீண் பிரச்சனை செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி முறைப்படி தாவா சொத்தை அளந்து தனக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு பட்டா பெற்றுவிட்டார் என்று சொன்னால்

சரியல்ல. கூட்டு பாகஸ்தரர் பாஸ்கரன் ஆகியோரை விசாரித்து பட்டா வழங்கப்ட்டது என்ற சொன்னால் சரியல்ல அதனால் தான் பாஸ்கர் வாதி பெற்ற பட்டாவை பற்றியோ வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் பற்றி ஆட்சேபனை செய்யவில்லை என்று சொன்னால் தெரிந்திருந்தால் ஆட்சேபனை செய்திருப்பார் அவருக்கு தெரிந்திருக்காது என நினைக்கின்றேன். தாவா சொத்திற்கு அடுத்த நிலமான தென்புறத்தில் தான் பாஸ்கருக்கு நிலம் உள்ளது எனவே வாதியின் பட்டா ஆவணம் பற்றி தெரியாது என சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்லல. எனக்கு பாத்தியமில்லாத தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்து விட்டு எனக்கு வாய்மொழியாக கிரையம் கொடுக்கப்பட்டது என பொய்யாக சாடசியம் அளிக்கிறேன் என்ற சொன்னால் சரியல்ல. தாவா சொத்தல் எனக்கு எந்த விதமான உரிமையும் அனுபவமும் இல்லை வாதிக்கு சட்டபடி சொந்தமானது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5 முதல் 7 ஆவணங்கள் இவ்வழக்கிற்கு தொடர்பற்றது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தாவா சொத்துக்கும் சம்பந்தம் இல்லை என்பதால் வாதி சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த சட்ட அறிவிப்பில் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான் அந்த

12.03.2026



அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன். அறிவிப்பு அனுப்பியபோது வாதியின் பட்டாவை ரத்து செய்ய மேல்நடவடிக்கை செய்தேன் ஆனால் பதில் இல்லை. மேல் நடவடிக்கை சம்பந்தமாக நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தில் நான் தொழிற்சாலை கட்டியுள்ளேன்.தொழிற்சாலை கட்டுவதற்கு உரிய அரசு துறையிலிருந்து அனுமதி பெற்று எந்த ஆவணமும் இவ்வழக்கில் தாக்கல் செயய்வில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக சொல்கிறேன் எந்த அரசு துறை ஆவணமும் அனுமதி அளித்ததாக வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து உள்ள பகுதி குடியிருப்பு விவசாய பகுதி என்பதால் தொழிற்சாலை கட்ட அனுமதி கிடைக்காது நான் அது போன்ற எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சட்ட விரோதமாக தாவா சொத்தை அபகரிக்க நான் தொழிற்சாலை அமைத்து நான் செயல்படுகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதன்னை நிரூபண வாக்குமூலத்தில் வாதி என்னிடம் டிமாண்ட் செய்ததாக சொல்லப்படும் சங்கதிகள் மற்றும் சொத்து உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல அவ்வாறு குறிப்பிடப்பட்ட குற்றசாட்டிற்க்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை

12.03.2026



என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிக்கு மட்டும் தான பாத்தியப்பட்ட சொத்து அதில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது எனவே சுவாதீன்தை் ஒப்படைக்கவேண்டும் என்ற சொன்னால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/–திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.